வேலூர் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண்.1976 /அ2/2020, நாள் 17.04.2020

– – –

பொருள் : பள்ளிக்கல்வி – சார்நிலைப்பணி – ஏப்ரல் 2020 மாதத்திற்கான ஊதியப்பட்டியல் தயார் செய்தல் மற்றும் கருவூலங்களில் சமர்ப்பித்தல் – பணம் பெற்றும் வழங்கும் அலுவலர்கள் மற்றும் அலுவலகப்பணியாளர்கள் பணிகள் மேற்கொள்ள அனுமதி வழங்குதல் – சார்பாக.

பார்வை :
1) அரசாணை எண். 41 (பணியாளர் மற்றும் சீர்திருத்தம் (கே)) துறை நாள் 03.04.2020
2) சென்னை–6, பள்ளிக்கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.0073/பி.சி./ப.க.இ./ 2020. நாள் 08.04.2020
3) அரசாணை எண். 347 (மக்கள் நல்வாழ்வு மற்றம் குடும்ப நலம்) துறை நாள் 16.03.2020
4) அரசாணை எண். 193 (தேசிய பேரிடர் மேலாண்மை) துறை நாள் 15.04.2020

– – –

ஒருங்கிணைந்த வேலூர் மாவட்டத்தில் பள்ளிக் கல்வித் துறையின் கீழ் உள்ள அலுவலகங்கள் மற்றும் அனைத்துவகைப்பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கு ஏப்ரல் 2020 மாதத்திற்கான ஊதியத்தினை உரிய நேரத்தில் பெற்று வழங்க ஏதுவாக ஊதியப்பட்டியல் தயார் செய்து சார்ந்த கருவூலங்களில் சமர்ப்பித்தல் பணியினை 23.04.2020க்குள் நிறைவுபெறும் வகையில் மாவட்டக்கல்வி அலுவலர்கள் / வட்டாரக்கல்வி அலுவலர்கள் / பள்ளித் தலைமையாசிரியர்கள் உள்ளிட்ட அனைத்து பணம் பெற்று வழங்கும் அலுவலர்கள் (DDOs) மற்றும் மேற்படி அலுவலகங்களில் பணிபுரியும் ஊதியப் பட்டியல் தயாரிக்கும் பிரிவு பணியாளர்கள் அரசின் Covid-19 சார்ந்த உரிய வழிகாட்டுதலுக்கு உட்பட்டு பணியினை மேற்கொள்ளுமாறு (அலுவலக அடையாள அட்டை அணிந்து செல்லும்படி) கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் பார்வை 1ல் காணும் அரசாணையில் தெரிவித்துள்ளவாறு ஒருநாள் ஊதியம் பிடித்தம் செய்த விவரத்தை 23.04.2020க்குள் இவ்வலுவலக இணைய தளத்தில் (www.edwizevellore.com) உள்ளீடு செய்யும்படி அனைத்துவகை பள்ளி தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

17.04.2020

முதன்மைக்கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்

1) மாவட்டக்கல்வி அலுவலர்கள், வேலூர், இராணிப்பேட்டை, அரக்கோணம், திருப்பத்தூர், வாணியம்பாடி
2) அனைத்து வட்டாரக்கல்வி அலுவலர்கள்.
3) அனைத்துவகை உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள்

நகல்

1) வேலூர், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது
2) திருப்பத்தூர், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது
3) இராணிப்பேட்டை, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு பணிந்தனுப்படுகிறது.
4) வேலூர், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது
5) திருப்பத்தூர், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது
6) இராணிப்பேட்டை, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது
7) திருப்பத்தூர் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் அவர்களுக்கு கனிவுடன் அனுப்பப்படுகிறது
8) இராணிப்பேட்டை மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் அவர்களுக்கு கனிவுடன் அனுப்பப்படுகிறது
9) சார்ந்த கருவூல/ சார் கருவூல அலுவலர்கள்